இருக்கு. அதனால், அவருடைய ஆர்வத்தை இன்னும் ஊக்குவிக்க துணையாக இருப்பேன்.

எட்டு ஆண்டு இல்லற வாழ்க்கையில் அவர் வீட்டுக்காக ஒதுக்கிய நேரம் ஓராண்டுதான் இருக்கும். பிள்ளைகளும் இதில் ஆர்வமாக இருப்பதால், இந்த குறை பெரிதாக தெரியவில்லை. மனநிறைவாகவே இருக்கிறது'' என்றார்.



தெற்கு மண்டல அணியின் கிரிக்கெட் வீரராக விளையாடி வருகிறார். பல கிரிக்கெட் வீரர்களையும் சந்தித்துள்ளார்.

**ஆச்சரிய பரிசு**

''அப்போது அவர்களின் பிறந்த தினத்தை எண்ணாகக் கொண்ட ரூபாய் நோட்டுகளை பரிசாக தரும்போது அதிக மகிழ்ச்சி அடைவார்கள். நான் சந்தித்த கிரிக்கெட் பிரபலங்களில் என்னை மிகவும் ஈர்த்தவர், உலக கிரிக்கெட்டின் கடவுளாக போற்றப்படும் நமது சச்சின் தெண்டுல்கர்.

2010 'ஐ.பி.எல்.' கிரிக்கெட் தொடரில் சென்னையில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது சச்சினின் பிறந்த தினத்தை குறிக்கும் எண் கொண்ட இரண்டு 10 ரூபாய் நோட்டுகளில் ஒன்றை சச்சினிடம் காண்பித்து கையெழுத்து கேட்டேன். 'நான் ரூபாய் நோட்டுகளில் கையொப்பம் இடுவதில்லை' என்றார்.

பின்னர், அந்த ரூபாய் நோட்டைப் பற்றி சொன்னதும் அவரது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆர்வமாக வாங்கிப் பார்த்து– தன் நிலையை மறந்து– 'இந்த ரூபாய் நோட்டின் 'ஜெராக்ஸ்' ஒன்றை எனக்கு தர முடியுமா?' என்று கேட்டார்.

புகழின் உச்சியில் இருக்கும் ஒருவரிடம் இத்தகைய வெகுளியான வெளிப்பாட்டை யாரும் நிச்சயம் எதிர்பார்க்க முடியாது. மழலை உள்ளம் படைத்த சச்சினின் அந்த அணுகுமுறை என் மனதைப் பறித்துவிட்டது.



இப்போது சச்சின் 100 சதங்கள் அடித்த நாட்களை நினைவுபடுத்தும் எண் வரிசை கொண்ட ரூபாய் நோட்டுகளை சேகரித்ததோடு, கிரிக்கெட் குறிப்புகளுடன் புத்தகம் போல் உருவாக்கி உள்ளேன். மேலும், சச்சின் 100 ஆண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்த்தி அவரின் 100 ஆண்டு பிறந்தநாள் ரூபாய் நோட்டுகளை வரிசைப்படுத்தி, கிட்டத்தட்ட 5 அடி அளவில் 'பிரேம்' போட்டு 22 புகைப்படங்களுடன் சச்சினுக்கு பரிசளித்துள்ளோம்'' என்றார் ராஜேஷ்.

அத்தகைய மகிழ்ச்சிகளால், தனது தேடல்களின் ரணங்களை அடிக்கடி மறந்துவிடுகிறார்.

## பைரவர் விரதம்

சித்திரை மாத பரணி நட்சத்திர நாளில் (ஏப்ரல் 22 ஞாயிற்றுக்கிழமை) பைரவரை நினைத்து விரதம் இருந்தால், காரியத் தடைகள் நீங்கும். பைரவருக்கு தயிர் சோறு படைத்து வழிபடலாம்.

*– எஸ்.விஜயா சீனிவாசன், திருச்சி.*

